**வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் -II மற்றும் வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் - II சுழற்சி நிதியம் - 2014**

வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் -II மற்றும் வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் - II சுழற்சி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைசாத்திட்ட 2008 யூலை 29 ஆம் திகதிய எஸ்எல்-பி94 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் -II மற்றும் வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் - II சுழற்சி நிதியத்தின் கடன் உடன்படிக்கையின் படி, இலங்கை மத்திய வங்கி செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. வறியோர் வருமான மட்டத்தை முன்னேற்றி வருமானம் உருவாக்கல் நடவடிக்கைகளுக்காக கடன் வழங்குவதன் மூலம் அவர்களுக்காக முறையான நிதிச் சேவையை விருத்தி செய்தல் உட்பட பங்குபற்றல் நிதியளிப்பு நிறுவனங்கள் மற்றும் பங்குடமை முகவர்கள் என்பவற்றின் முகாமைத்துவம் மற்றும் பயிற்சியளித்தல் இயலளவை முன்னேற்றுதல் மற்றும் வருமானம் உருவாக்கல் சந்தர்ப்பங்கள் மற்றும் நலனாளிகளின் இயலளவை அதிகரித்தல் மூலம் வறுமையைக் குறைத்தல் பிரதேச சமமின்மையைக் குறைத்து சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு ஆதரவு வழங்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 3,076 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 2,759 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 2,704 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 2,575 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 சனவரியில் தொடங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இறுதி பணவளிப்பு நோக்கத்திற்காக கடன் செயற்பாட்டுத் திகதியானது 2015 நவம்பர் 12 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தனவா என்பதும்,

(ஈ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதி மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து

செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

செயற்திட்டத்தின் செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம், செயற்திட்ட நெறிப்படுத்தல் குழு செயற்திட்ட அமுலாக்கலுடன் தொடர்புபட்ட கொள்கை விடயங்களை நிர்ணயிப்பதற்கு மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட நெறிப்படுத்தல் குழுவின் ஒரு கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதி பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லின் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லின் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லின் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 2,575 | 2,704 | - | 286.09 | 362.93 | 2,435 | 3,325 |
| இலங்கை அரசாங்கம் | 184 | 372 | 576 | - | 19.02 | - | 124 |
| | 2,759 | 3,076 | 576 | 286.09 | 381.95 | 2,435 | 3,449 |

ரூபா 2,704 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 2,575 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், நலனாளிகளிற்காக உப கடன்கள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,420 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 2,305 மில்லியன் மற்றும் அவற்றின் மீதான முழு ஒதுக்கீடு குறித்த நோக்கத்திற்காக 2014 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 223.88 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 176 மில்லியன் உபகரணங்களின் கூறுகள், ஆலோசனை சேவைகள் மற்றும் இயலளவு அபிவிருத்தி கூறின் கீழ் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ஜ.யென் 73.9 மில்லியன் மாத்திரமே 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 எஸ்ஓஈ நடைமுறைகளின் பிரயோகம் தொடர்பான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கள உத்தியோகத்தர்களிற்கு செய்யப்பட்ட ரூபா 14.7 மில்லியன் தொகையான சம்பளங்கள் மற்றும் ரூபா 6.8 மில்லியன் தொகையான ஏனைய படிகள் 2014 திசெம்பர் 31 வரையும் கடனளிக்கும் முகவரிடமிருந்து மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 இற்கு முன்னர் ஏற்பட்ட ரூபா 3.3 மில்லியன் கூட்டுத் மொத்தத் தொகையான கள உத்தியோகத்தர்களிற்கான படிகள் உபகரணக் கூறின் கீழ் செயற்திட்டத்தால் கோரப்பட்டிருந்தது. ஆகவே, இது கடனளிக்கும் முகவரால் திருப்பப்பட்டிருந்தது.

**3.3 பௌதீக முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 13 ஆம் பந்தியின் பிரகாரம், உப கடன்கள் வழங்குவதற்காக செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் குறைந்தது 50 சதவீதம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கின்ற நலனாளிகளிற்கு வழங்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், வழங்கப்பட்ட மொத்த கடன் பெறுமதியின் 24 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 755.5 மில்லியன் பெறுமதியான 12,286 உப கடன்கள் மாத்திரம் வட மாகாணத்திலுள்ள நலனாளிகளிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள நலனாளிகளிற்கு வழங்கப்பட்ட உப கடன்களின் பெறுமதியின் முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட உப கடன்களின் மொத்தப் பெறுமதியின் 5 சதவீதத்தை விடக் குறைவாக இருந்தது.

(ஆ) மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, மொத்த கடன் பெறுமதியின் 34 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,070.1 மில்லியன் பெறுமதியான 20,564 உப கடன்கள் வட மேல், வட மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள நலனாளிகளிற்கு மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீனவர்கள் மற்றும் சிறு கைத்தொழில் துறையினர்களிற்காக செயற்திட்டத்தால் ரூபா 681 மில்லியன் பெறுமதியான 11,859 உப கடன்கள் மாத்திரமும் அதேநேரம், விவசாயம், கால்நடை மற்றும் வியாபாரம் மற்றும் சேவைகள் போன்ற வேறு துறைகளிற்காக ரூபா 2,445 மில்லியன் பெறுமதியான 46,545 உப கடன்களும் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 சுழற்சி நிதியம்**

கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(1) ஆம் பிரிவின் பிரகாரம், 2011 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியில் சுழற்சி நிதியக் கணக்கு திறக்கப்பட்டது. உப கடன் நோக்கத்திற்காக பணவளிப்புகள் கடன் அறவீடுகளின் பெறுகைகளில் 2013 இல் தொடங்கப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 2,748 மில்லியன் பெறுமதியான மீள்நிதிக் கடன்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுழற்சி நிதியத்தால் விடுவிக்கப்பட்டிருந்தது.